இந்த நேரத்தில் இந்த ஆண்டு இதே கூட்டத்தொடரிலே இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களை நாம் இழந்திருக்கிறோம். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் உங்களுடைய உரிமைக்கும் உங்களுடைய உயிருக்கும் ஓரளவிற்கு நான் பாதுகாப்பாக இருக்க வேண்டும், அந்த அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்களை நல்லமுறையில் தங்கள் உடம்பைப் பரிசோதித்து பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். இரவு நேரங்களில் வாகனங்களில், மோட்டார் வாகனங்களில் அதிகமாகப் பயணம் செய்யக் கூடாது என்பதும் என்னுடைய வேண்டுகோளாகும். ஆகவே இந்த முறைகளைப் பின்பற்றுவோமானால் உண்மையிலேயே இது போன்ற இழப்புக்களை, நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் நம்முடைய சட்டமன்றத்திற்கும் ஈடுகட்டமுடியும்.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த உறுப்பினர் திரு. எஸ். நாராயணன் அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில்பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று,நாளை (13-5-1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். பின்னர் பேரவை 9-27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

2. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

96. கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு கிராமத்தில் கிறித்துவர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்கள் தொடர்பாக 1-3-1982 மற்றும் 15-3-1982 ஆகிய தினங்களில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து ஒய்வு பெற்ற நீதிபதி திரு. பி. வேணுகோபால் விசாரணைக் குழுவின் அறிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணைக்குழு சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

97. மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும், காவல் துறையினருக்குமிடையே ஏற்பட்ட மோதல் குறித்து விசாரிக்க மதுரை தெற்கு மாவட்ட முதன்மை செசன்சு நீதிபதி திரு. வி. சேது சோலையர், விசாரணைக் குழுவின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணைக் குழு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(அ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள். எதுவுமில்லை.